**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET**

Case No. **SC.No.329/2023**
Prosecution: **PW5**

**Deposition of the witness of LW8**

| | | | |
|---|---|---|---|
| **Name** | ஜெயலட்சுமி | **District** | திருப்பத்தூர் |
| **Father's Name** | சம்பத் | **Calling** | காவல் ஆய்வாளர், திருப்பத்தூர் நகர காவல் நிலையம் |
| **Age** | 46 | **Religion** | -- |
| **Village/Town** | திருப்பத்தூர் | **Caste** | -- |
| **Taluk** | திருப்பத்தூர் | **Aadhar Card No.** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of February 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். (சாட்சி நேரடியாக ஆஜராக இயலாத காரணத்தினால் அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியம் அளிக்க சாட்சிக்கு காணொளி ( Video Conference) முறைப்படி சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்பட்டது.)

<u>**முதல் விசாரணை:-**</u>

1. நான் தற்போது திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.11.2017 அன்று இராணிப்பேட்டை மது விலக்கு அமல் பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, அரக்கோணம் மது விலக்கு ஆய்வாளர் பொறுப்பு இராணிப்பேட்டை மது விலக்கு அமல் பிரிவு அவர்கள் பகல் 12.00 மணிக்கு நானும், தலைமை காவலர் ரவிச்சந்திரன், தலைமை காவலர் லாரன்ஸ், பெண் தலைமை காவலர் இரமாபாய் மற்றும் ரூமேத்தா மற்றும் பார்ட்டி

சகிதம் மது விலக்கு வேட்டை சம்மந்தமாக கோவிந்த சேரி குப்பம், ஏரிக்கரையிடம் கண்காணித்து கொண்டு போகும் போது, எங்களை அடையாளம் கண்டு ஓட முயற்சித்த அமுதா, வயது 48, க/பெ.குமார், தலங்கை காலணி, வாலாஜா என்று கூறினார்.

2) அவர் வைத்திருந்த பிளாஸ்டிக் பைகளை சோதனை செய்ய சுமார் 35லி கொள்ளளவு கொண்ட 3 பிளாஸ்டிக் கவரில் சுமார் 105லி நாட்டு சாராயம் இருந்தது. அதைப் பற்றி விசாரிக்க ஆந்திர மாநிலம் ஐயன்கண்டிகைக்கு சென்று பெயர் விலாசம் தெரியாத நபரிடம் இருந்து நாட்டு சாராயத்தை வாங்கி வந்து விற்பனை செய்ய வைத்திருந்ததாக தன் குற்றத்தை ஒப்புக் கொண்டவரை காவல் ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்தும், எதிரி எவ்வித அச்சுறுத்தலும் ஆசை வார்த்தைகளும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தியாகராஜன், தேவராஜ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தும், அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 105லி நாட்டு சாராயத்தை 12.45 மணிக்கு மகசரில் கைப்பற்றினார்.

3) கைப்பற்றிய நாட்டு சாராயத்தை முகர்ந்து பார்க்க ஒருவித விஷ வாடையுடன் கண் எரிச்சல் ஏற்பட்டதால், அதை அருந்தினால் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என கருதி, இராசாயன பரிசோதனைக்கு அனுப்ப வேண்டி மாதிரிக்கு 750ml அளவு கொண்ட இரண்டு கண்ணாடி பாட்டில்களில் தலா 500ml வீதம் எடுத்து வாய்புறம் மூடி வெள்ளை துணியால் சுற்றி SHO Seal வைத்தும் மீதமுள்ள சாராயத்தை நிலையம் எடுத்து வர சாத்தியம் இல்லாததால் அதே சாட்சிகள் முன்னிலையில் 13.00 மணிக்கு யாருக்கும் பயன்படாதவாறு கீழே கொட்டி அழித்து, அதே சாட்சிகள் முன்னிலையில் அழிப்பு மகசர் தயார் செய்யப்பட்டது.

4) ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.**7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அழிப்பு மகசர் **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் 14.00 மணிக்கு நிலையம் சேர்ந்து எதிரி மீது குற்ற எண்.515/2017 சட்டப்பிரிவு 4(1)(aaa), 4(1–A) TNP

Act r/w 328 IPC படி வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

6) இரண்டு கண்ணாடி பாட்டில்களில் தலா 500ml வீதம் எடுத்து வாய்புறம் மூடி வெள்ளை துணியால் சுற்றி SHO Seal வைத்து இராசாயன பரிசோதனைக்கு எடுத்தது போக மீதமுள்ள நாட்டு சாராயத்துடன் கூடியது **சா.பொ.1 வரிசை** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**</u>

1) சம்பவயிடம் எங்கள் காவல் நிலையத்தில் எவ்வளவு தொலைவில் இருக்கும் என்றால் சுமார் 25கி.மீ தொலைவில் இருக்கும். சம்பவயிடத்திற்கு காவல் ஆய்வாளர் அவரது ஜீப்பிலும் நாங்கள் எங்கள் இருசக்கர வாகனங்களில் சென்றோம்.

2) கைப்பற்றியதாக சொல்லப்படும் மூன்று கவர்களில் இருந்த நாட்டு சாராயத்தை கீழே கொட்டி அழித்த பிறகு மீதமிருந்த மூன்று பிளாஸ்டிக் கவர்களை என்ன செய்தோம் என்றால் அதுவும் அழிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு 3 பிளாஸ்டிக் கவர்கள் அழிக்கப்பட்டது குறித்து அழித்தல் மகசரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நினைவில்லை.

3) எதிரியை வழக்கு சொத்துடன் கைது செய்து, கைது குறிப்பாணை தயார் செய்த சமயத்தில் நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். அவ்வாறு தயார் செய்யப்பட்ட கைது குறிப்பாணையில் சம்பவயிடத்தில் எதிரி 3 லாரி டியூப்களில் சுமார் 35லி கொள்ளளவு கொண்ட 3 பிளாஸ்டிக் கவரில் சுமார் 105லி நாட்டு சாராயம் வைத்திருந்ததாக குற்றம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது, எதிரி பிளாஸ்டிக் கவர்களில் நாட்டு சாராயம் வைத்திருந்தார்.

4) நான் சொல்வது போல் எதிரியிடம் இருந்து எந்த ஒரு பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், என்னுடைய மேல் அதிகாரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும், வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down before me in open court, read over to through Video Conference the witness and admitted by the deponent to be correct.

S/d. A. Daoudh Ammal,
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.